சட்டப்படி வழங்கப்பட்டது. அது சட்டத்தில் உள்ள குறை என்றால் அதனை மாற்றியமைக்க அரசு ஆலோசனை செய்யும். ஆனால் அதன் அடிப்படையில்தான் பாண்டியன் போக்குவரத்துக்கழகத்திற்கு இரண்டு மதிப்பெண்கள் குறைவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்,: வினா எண் 330......

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே அது என்னுடைய மாவட்டம் அதைப்பற்றி நான்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் அமைச்சர் பதிலளித்து விட்டார்—நேரத்தை இப்படி.........

திரு. க. சுப்பு : தலைவர் அவாகளே — மாண்புமிகு உறுப்பினர் அது அவருடைய மாவட்டம் என்ற அளவிலே பேச விரும்புகிறார். அமைச்சர் சொல்லும்போது மச்சாபுரத்திலிருந்து கடல்குடி என்று சொன்னார். இரண்டு ஊர்களுமே கிடையாது. மச்சாபுரத்திலிருந்து கடல்குடி என்று இருக்க வேண்டும். ஒரு வேளை அமைச்சருக்கு ஆங்கிலத்தில் டைப் பண்ணி கொடுத்திருப்பார்கள். அதை தன்னுடைய மாவட்டம் என்ற முறையிலே உறுப்பினர் திருத்த விரும்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு நீங்கள் யோசனை சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் யோசனை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கேள்வி எண் 330.

செங்கம்—வளத்தி பேருந்து வழித்தடம்.

*வினா 330—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் செங்கத்திலிருந்து காஞ்சி திருவண்ணாமலை வழியாக வளத்தி செல்லும் தனியார் பஸ் ஆண்டுக்கணக்கில் தடத்தில் செல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உரிமையாளர் மீது அரசு எடுத்துள்ள, நடவடிக்கை என்ன ?

(இ) தடத்தில் அரசு பேருந்து விட நடவடிக்கை எடுக்குமா ?

1979 மார்ச் 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—

(அ) வடாற்காடு மாவட்டம் செங்கத்திலிருந்து காஞ்சி, திருவண்ணாமலை வழியாக வளத்தி செல்லும் பேருந்து எம். டி.ஒய். 7274 கடந்த 1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் முதல் தடத்தில் செலுத்தப்படவில்லை.

(ஆ) பேருந்து உரிமையாளர் மீது மோட்டார் வாகன விதி 160 (கே)-ன் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்கண்ட தடத்தில் 1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் முதல் ஸ்பேர்பஸ் வைத்திருக்கும் உரிமையாளர்களுக்கு அவ்வப்போது தற்காலிக அனுமதி வழங்கி, பொது மக்களுக்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

மீண்டும் இப்பேருந்து உரிமையாளர் தன்து பேருந்தினை 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் இத் தடத்தில் செலுத்தி வருகின்றார். ஆகவே அரசு பேருந்து விடுவதற்கான செயற் குறிப்பு ஏதும் இல்லை.

ஆலப்பாக்கம் அருகே சுரங்கப்பாதை.

*வினா எண் 331—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கடலூர்—சிதம்பரம், நெடுஞ்சாலையில் ஆலப்பாக்கம் கிராமத்தில் தற்போதுள்ள ரயில் சாலைக் கடவுக்குப் பதிலாக சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர்—சிதம்பரம் நெடுஞ் சாலையில் ஆலப்பாக்கம் அருகில் ரயில்வே கிராசிங் மிக மோசமான பாதையாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அங்கே போக்குவரத்துக்கே மிகவும் இடையூறாக இருக்கிறது. அந்தச் சாலையில் அவசரமாக தமிழக அரசு சுரங்கப் பாதை அமைக்க ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.